**ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா பிறைவேட் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயத்தினை வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படை தொடர்பாக நிதிக்கூற்றுக்களிலுள்ள 2.5 ஆம் குறிப்பின் மீது எனது கவனத்தை செலுத்துகின்றேன். கம்பனி எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் கம்பனியினை கலைப்பதற்கு தீர்மானத்திருக்கவில்லை. ஆகவே, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படும். எவ்வாறாயினும், கம்பனியின் இயக்குனர் சபையானது 2015 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலினை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தினை கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளது. அதன் விளைவாக, செயற்திட்டத்தின் ஹோட்டல் நிர்மாண செயற்பாடுகள் ஒரு முடிவிற்கு வந்துள்ளன. மேலும், 2023 மார்ச் 13 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் MF/018/2023/055 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏனைய எஸ்ஓஈ (SOE) களுக்கிடையில் கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட்டின் முதலீட்டு திரும்பப்பெறல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விருப்பத்தினை தெரிவிக்கும் செயற்பாடானது (EOI) ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் கீழ் துணைக்கம்பனியாக ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட் (பிறைவேட்) லிமிட்டட்டானது முன்மொழியப்பட்ட முதலீட்டு திரும்பப்பெறலாக கருத்திற்கொள்ளப்படும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள்இ செலவினங்கள்இ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனியின் முக்கிய செயற்பாடு ஹியாட் ரீஜென்ஸி ஹம்பாந்தோட்டை ஹோட்டலினை சொந்தமாகக் கொண்டு விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபடுவதாக இருந்தது. கம்பனியின் இயக்குனர் சபையானது 2015 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலினை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தினை கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளது. அதன் விளைவாக, செயற்திட்டத்தின் ஹோட்டல் நிர்மாண செயற்பாடுகள் முடிவிற்கு வந்துள்ளதுடன் அதன் காரணமாக கம்பனியின் பிரதான வருமானமாக நிலையான வைப்பு வட்டி காணப்படுகின்றது.

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,731,176 தொகை நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபமாக ரூபா 12,131,676 தொகை காணப்பட்டது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா 14,862,852 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முதலீடுகளில் இருந்தான வருமானத்தில் ஏற்பட்ட குறைபாடே இதற்கான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம், நிர்வாக செலவினங்கள் மற்றும் தேறிய இலாபம் / (நட்டம்) ஆகியவற்றின் வேறுபாடுகள் மற்றும் சதவீதம் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் குறைவு என்பவைகளின் பகுப்பாய்வு பின்வருமாறு.

| வருடம் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் (ரூபா) | 1,545,793 | 20,638,644 | 20,044,189 | 21,624,281 | 39,142,280 |
| வருமான வளர்ச்சியின்/(குறைவின்) சதவீதம் | (92.5) | 3 | (7) | (45) | (21) |
| நிர்வாக செலவினங்கள் | 4,276,969 | 4,354,515 | 4,418,012 | 3,918,547 | 4,003,549 |
| நிர்வாக செலவின வளர்ச்சியின் /(குறைவின்) சதவீதம் | (1.8) | 1 | 13 | (2) | (38) |
| வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் /(குறைவு | (2,731,176) | 12,131,676 | 11,875,894 | 13,456,358 | 25,299,887 |
| தேறிய இலாப அதிகரிப்பின் /(குறைவின்) சதவீதம் | (122.5) | 2 | (12) | (47) | (21) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் /(குறைவின்) சதவீதமாக | (18.42) | 1.11 | 1.75 | 2.02 | 3.95 |
| தேறிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் /(குறைவின்) சதவீதமாக | (92.5) | 2.97 | (7.27) | (44.77) | 0.01 |
| பங்கொன்றிற்கான உழைப்பு (ரூபா) | (0.05) | 0.24 | 0.24 | 0.27 | 0.51 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதமற்ற பரிமாற்றங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதிபலனாக பங்கொன்று ரூபா 10 படி சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடனிற்கு சமனான ரூபா 400 மில்லியனால் மூலதனத்தினை குறைத்துவிடுவதற்கு 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி சபை தீர்மானித்துள்ளது. மேலும், சபை 2023 ஆம் ஆண்டிற்கான வட்டியினை நிறுத்துவதற்கும் பெறவேண்டிய வட்டி ரூபா 126,075,753 தொகையினை பதிவளிப்பு செய்வதற்கும் அனுமதித்துள்ளது. மீளாய்வாண்டின் போது வட்டியானது பதிவளிக்கப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டில் இருந்து மேற்கூறிய பரிமாற்றங்களிலிருந்தான தேறாத வட்டி வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு கம்பனி ஏற்கனவே வரியினை செலுத்தியுள்ளது. | கணக்கீட்டு நடைமுறைகளின் அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானம் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப வரி அதிகாரிகளுக்கான வரிப் பொறுப்பினை கண்டறிந்து வரிக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளது. | சூழ்நிலைகள் முறையாக மதிப்பீடு செய்த பிற்பாடு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2. இனங்கானப்படாத நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹோட்டல் நிர்மானத்தினை கைவிடுவதற்கு தீர்மானித்தமையினால் 2015 ஆம் ஆண்டில் மூலதன நடைமுறை வேலை மீதி ரூபா 111,103,548 தெகையினை சபை பதிவளித்துள்ளது. அதன்படி மேற்கூறப்பட்ட நிர்மாணத்தின் மீது செலவளிக்கப்பட்ட மொத்த தொகையானது ஆழ்ந்த கிரயமாகியது. | கூறப்பட்ட தொகையானது ஆரம்பத்தில் மூலதன நடைமுறை வேலைகளின் கீழ் மூலதன செலவினமாக அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன்பின்னர் ஹம்தோட்டையில் ஹோட்டல் செயற்திட்டத்தின் நிர்மாணத்தினை கைவிடுவதற்கு கம்பனியின் இயக்குனர் சபை தீர்மானித்தமையினால் 2015 ஆம் ஆண்டில் நட்டக்கழிவானது இலாப நட்டக்கூற்றிற்கு சாட்டப்பட்டது. | முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பாக முறையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும் |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இயக்குனர் சபை 2015 இல் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டல் நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தை கைவிடுதற்கு தீர்மானித்துள்ளது. அதன் விளைவாக செயற்திட்டத்தின் ஹோட்டல் நிர்மாண செயற்பாடுகள் ஒரு முடிவிற்கு வந்துள்ளது. மேலும், 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டடடில் (தாய் கம்பனி) | தற்போது இக்கம்பனியானது அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மறுசீரமைப்பு அலகினால் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் ஏனைய கம்பனிகளுக்கிடையே முதலீட்டினை பிரித்தெடுப்பதற்கு முன்மொழிந்துள்ளது. | அமைச்சரவை தீர்மானங்களினை அமுல்படுத்தப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | பங்குதாரர்களின் ஒரு பகுதி கம்பனியின் பங்குகளினை மாற்றுவதற்கு பொது முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சானது அவர்களின் அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. மேலும், 2023 மார்ச் 14 ஆம் திகதிய 23/0431/604/046 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டட் மற்றும் லிட்ரோ கேஸ் லங்கா லிமிட்டட் ஆகியவற்றினால் பேணப்படும் பங்குகளினை உடன் அமுலுக்கு வரும் வகையில் பொது திறைசேரிக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது அறிக்கையிடும் திகதி வரை நிறைவேற்றப்படவில்லை. | | |
| (ஆ) | 2014 ஆகஸ்ட் 28 ஆம் திகதி ஹெலன்கோ ஹோட்டல் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்மாணத்தின் ஆரம்பத்திலிருந்து 36 மாதத்தினுள் நிலத்தினை முழுமையாக அபிவிருத்தி செய்யத் தவறினால் நிபந்தனையை மீறியமைக்கமைய எவ்விதமான வளமுமின்றி ஒப்பந்தமானது தன்னிச்சையாக ரத்து செய்யப்படுவதோடு ஆரம்பத்தில் வைப்புச்செய்யப்பட்ட நிலத்தின் பெறுமதியில் 10 சதவீதம் பறிமுதலும் செய்யப்படும். ஆகையினால் கம்பனியின் நிதி நிலைமை மேலும் பலவீனமடையும் போது 10 சதவீத தண்டம் விதிப்பதற்கான சாத்திக்கூறு காணப்படுகிறது. | குத்தகைக்கு பெற்றவர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவதாக கருதி 10 சதவீமான தண்டத்திற்கு உட்பட்டு உடன்படிக்கையினை ரத்து செய்யாது என கம்பனியின் முகாமைத்துவம் கருதுகிறது. | குத்தகை உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்குவதை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதோடு சரியானதும் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளையும் எடுக்கவும். |
| (இ) | 2017 செப்தெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் பாதுகாப்பு சேவைகளினை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது 2017 ஆம் ஆண்டிற்கு பிறகு புதுப்பிக்கப்படவில்லை என்பதோடு உடன்படிக்கையினை முடிவுறுத்துவதற்கான காலப்பகுதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கைக்கு அமைய பாதுகாப்பு சேவை வழங்கப்படாத போதிலும் மீளாய்வாண்டின் போது கம்பனி ரூபா 1,394,125 தொகையினை செலுத்தியிருந்தது. | காலாவதி திகதியுடன் கூடிய முறையான உடன்படிக்கையொன்றினை கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை நாங்கள் குறித்துக்கொள்வதோடு அதன்படி நாங்கள் தற்போதைய உடன்படிக்கையினை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களினை மேற்கொள்வோம். கம்பனி இவ்வாறான விடயங்களிலிருந்து மீண்டுவருதற்கு தேவையான அறிவுறுத்தல்களை பாதுகாப்பு நிறுவனத்திற்கு கட்டாயமாக வழங்கும். | குத்தகை உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்குவதை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதோடு சரியானதும் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளையும் எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023/2024 ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான முன்கொண்டு செல்லும் வரி ரூபா 2,731,176 காணப்பட்ட போதிலும் கம்பனி 2023/2024 ஆம் மதிப்பீட்டு ஆண்டின் முதலாவது தவணைக் கொடுப்பனவாக ரூபா 1,221,311 தொகை வரியினை செலுத்தியுள்ளது. | காணப்படுகின்ற தெரிவுகளுக்கு அமைய கம்பனி இந்த தொகைக்காக மீளளிப்பு விண்ணப்பம் ஒன்றினை தயாரிக்க வேண்டியுள்ளது அல்லது எதிர்கால வரிப் பொறுப்புக்களிற்கு எதிராக எதிரீடு செய்யும் நோக்கில் இதனை தக்க வைக்க வேண்டியுள்ளது. | கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு முன்னர் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதோடு மேலதிக கொடுப்பனவினை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 செயலற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம்,பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியானது குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 177.97 மில்லியனை முதலீடு செய்து 3.8 ஹெக்டெயர் நிலத்தை பெற்றுக்கொண்ட போதிலும் எவ்வித பயன்தரு நோக்கத்திற்காகவும் நிலம் பயன்படுத்தப்படவில்லை. | பயன்தரக்கூடியதொரு முறையில் இச்சொத்தினை பயன்படுத்துவதற்கு சாத்தியமான சந்தர்ப்பங்களினை ஆராய்வதற்கு கடந்த காலங்களின் போது கம்பனியின் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. எவ்வாறாயினும், தற்போது இந்தக் கம்பனியினதும் முதலீட்டை திரும்பப்பெறுவதற்கு முன்மொழிந்துள்ளது. | குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காகவோ அல்லது பயன்தரக்கூடிய வேறு ஏனைய நோக்கத்திற்காகவோ இச்சொத்தினை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |